24th April 1959]

THE HON. SRI M. A. MANICKAVELU : நாமும் கொடுத்து வருகிறோம். அவர்களுக்கும் நிறையப் பணம் வெளியிலே யிருந்து வருகிறது. அத்துடன், ரொம்பப் பணக்காரர்கள் அந்த ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக வருகிறார்கள். அவர்களிடமிருந்தும் நிறைய கட்டணம் வசூல் செய்து கொள்கிறார்கள்.

SRI J. MATHA GOWDER : மருந்து வாங்குவதற்காக கொடுக்கக்கூடிய மான்யத்திலே பத்து ஆண்டுகளுக்கு முன்பு என்ன கொடுத்தார்களோ அதையே கொடுத்து வருகிறோம். அன்றைக்கிருந்த விலைக்கும் இன்றைக் கிருக்கும் விலைக்கும் மாறுதல் இருக்கிறது. பல மடங்கு விலை உயர்ந்திருக்கிறது. ஆகையால் மான்யத் தொகையின் அளவை உயர்த்திக் கொடுப்பதற்கு சர்க்கார் முயற்சிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் பொதுவாக ஆஸ்பத்திரிக்குக் கொடுக்கிற மான்யத்தைப்பற்றி பேசுகிறார். மூலக் கேள்வி குறிப்பாக வேலூரிலே இருக்கும் மிஷன் ஆஸ்பத்திரியைப்பற்றியது. முன்பு அவர்களுக்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுத்து வந்தோம். இப்போழுது வருஷத்திற்கு இருபதாயிரம் ரூபாய் கொடுக்கிறோம்.

SRI R. SRINIVASA IYER : Sir, is any grant being given to Sri Ramakrishna Mutt by the Government?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir. On the usual pattern, they are also given.

Railway Employees' Co-operative Bank, Madras

* 140 *Q.*—SRI N. K. PALANISAMI (on behalf of SRI M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any complaint was received by the Registrar of Co-operative Societies from some of the share-holders containing some allegations against some of the Directors of the Railway Employees' Co-operative Bank, Madras-3 ; and

(*b*) what are the allegations and what is the action taken by the Registrar?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The allegations generally relate to the misuse of the funds of the bank. Some of them have been enquired into and found to be baseless. Others are under investigation.

Sinking of wells in Harijan Colonies

* 141 *Q.*—SRI V. K. RAMASWAMY MUDALIYAR (on behalf of SRI A. GOVINDASAMY) : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

1955–56, 1956–57, 1957–58-ல் (1) சென்னை ராஜ்யம், (2) தென்னாற்காடு ஜில்லா, (3) விழுப்புரம் தாலுகா இவைகளிலுள்ள சேரிகளில் எத்தனை கிணறுகள் வெட்டப்பட்டன ?

[24th April 1959

THE HON. SRI P. KAKKAN : The number of wells sunk in Harijan colonies in Madras State, South Arcot district, and in Villupuram taluk, for the three years from 1955–56 to 1957–58 is as follows :—

	1955–56.	1956–57.	1957–58.
Madras State	650	1,068	1,061
South Arcot district ..	80	113	86
Villupuram taluk	9	13	9

SRI K. VINAYAKAM : ஹரிஜனங்கள் வாழ்கின்ற இந்தப் பகுதிகளில் அவர்களுக்கென்று தனியாக கிணறுகளை வெட்டுவதிலே, அவர்கள் அப்பிரதேசத்தில் ஒதுக்கப்பட்டு வாழ்கின்ற நிலை ஏற்படுகிறது. அப்படிச் செய்வதைவிட ஹரிஜனங்கள் வாழ்கின்ற சேரிகளுக்கும் மற்ற மக்கள் வாழ்கின்ற கிராமத்திற்கும் மத்தியிலே இரு சாராரும் வந்து கிணற்றைப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய அளவுக்கு கிணறுகள் வெட்டுவதற்கு அரசாங்கம் இனியாகிலும் உத்தரவிடுமா ?

THE HON. SRI P. KAKKAN : ஏற்கெனவே அந்தக் கொள்கையைத் தான் அரசாங்கம் கடைப்பிடித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

Special Minor Irrigation Programme in Coimbatore District

* 142 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1958–59-ம் வருடத்தில் கோயமுத்தூர் ஜில்லாவில் விசேஷ நீர்ப்பாசன திட்டங்களுக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது ?

(ஆ) எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Rs. 48,000.

(*b*) Rs. 13,000.

SRI P. G. MANICKAM : என்ன என்ன திட்டங்களுக்கு இந்தத் தொகை ஒதுக்கப்பட்டது ? அதில் எவ்வளவு தூரம் செலவழிக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது கோபிச்செட்டி பாளையம் தாடப்பள்ளி சானல் விஸ்தரிப்புத் திட்டம் பற்றியது. அதற்குத் தான் இந்தத் தொகை செலவிடப்பட்டிருக்கிறது.

Central Grants

* 143 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the up-to-date position of the grants received from the Central Government during 1958–59;

(*b*) the purpose for which they are received; and

(*c*) the amounts so far utilised?